9.55 மணி

திரு. பெ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இளம்பிள்ளைப் பகுதியைச் சுற்றி விவசாயிகள் இருக்கிற பகுதியாகவும், விசைத்தறியாளர்கள் இருக்கிற பகுதியாகவும், மேலும் சிறிய பேக்டரிகள் இருக்கிற பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினால் இந்தத் துணை மின் நிலையத் திட்டத்தை வெகு விரைவில் அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் இளம் பிள்ளையில் 110/22 கே. வி. துணை மின் நிலையம் 8-வது திட்ட காலத்தில் அமைப்பதற்காக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. 8-வது ஐந்தாண்டுத் திட்டம் அடுத்த ஆண்டு தொடங்க இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. பெ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு இளம்பிள்ளை பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதாக இருந்தது. ஆனால் ஏதோ ஒரு காரணத்தால், அந்தத் துணை மின் நிலையம் அங்கிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் உள்ள நல்லசமுத்திரம் என்ற பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும், இப்போது இந்தத் துணை மின் திட்டத்தை உடனடியாக அமைக்க ஏற்பாடு செய்து கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் இருக்கும் என்பதையும் கருத்தில் கொண்டு, இதனை உடனடியாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசியம் அரசு இதைப் பரிசீலிக்கும்.

விவசாய விளை பொருள்கள் கொள்முதல்.

*2141. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாய விளைபொருள்களை அரசே ஆதரவு விலை (Support Price) கொடுத்துக் கொள்முதல் செய்வதற்கான திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

1990 சனவரி 19]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மாநில அரசின் பரிந்துரையையும் வேளாண்மை விளை பொருள் விலை நிர்ணயக் குழுவின் பரிந்துரையையும் கருத்திற்கொண்டு, வேளாண்மை விளை பொருட்களுக்கு ஆண்டு தோறும் மைய அரசுதான் விலை நிர்ணயம் செய்கிறது. மைய அரசு நிர்ணயிக்கும் விலைக்கு மேல், விலை நிர்ணயம் செய்ய மாநில அரசுக்கு உரிமை கிடையாது. இருப்பினும் விவசாயி களின் நலனைக் கருத்திற் கொண்டு மாநில அரசு ஏகபோக நெல் கொள்முதல் செய்யும் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத் தொகை தருகிறது. எனவே, அரசு ஆதரவு விலை (Support Price) கொடுத்து விவசாய விளை பொருட்களை கொள்முதல் செய்வதற்கான செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு நெல்லுக்கும் கோதுமைக்கும் மட்டும்தான் ஆதரவு விலை என்கிற நிலை இருந்தது. இப்போது சிறு தானியங்களான கம்பு, கேழ்வரகு, சோளம், மக்காச் சோளம் போன்றவற்றிற்கும் ஆதரவு விலை தருவது என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது. இதைப் பொறுத்து, நம்முடைய அரசாங் கத்தின் நிலை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த மத்திய அரசுதான் அந்த விலையை நிர்ணயித்திருக்கிறது. இப்போது அதைப்பற்றி நான் ஒன்றும் பதில் சொல்வதற்கில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆதரவு விலை கொடுத்து அரசாங்கம் இவற்றைக் கொள்முதல் செய்யவில்லை என்றால், விவசாயிகளுக்கு பெருத்த கஷ்டம் ஏற்படும். எனவே ஆதரவு விலை கொடுத்து அனைத்து தானியங்களையும்—விவசாய விளை பொருள்களையும் அரசே கொள்முதல் செய்யும் நிலையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் உற்பத்தி செய்வதற்கு ஆகின்ற செலவையும், ஒரு ஹெக்டேரில் எந்த அளவுக்கு விளைச்சல் ஏற்படுகிறது என்பதையும் கணக்கிட்டு, அதற்கான குழு நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து விலையை நிர்ணயித்திருக்கிறது. அந்த ஆதரவு விலையில்தான் இப்போது

நாம் நெல்லைக் கொள்முதல் செய்கிறோம். இருப்பினும் மேலும் விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும் என்று நம்முடைய மாநில அரசு—அதிலும் குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்—ஒரு குவிண்டாலுக்கு ரூ. 35 ஊக்கத்தொகையாகத் தந்து கொள்முதல் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தேங்காய் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படாத வகையில் நாடு முழுவதும் மானியம் வழங்கி வருகிறது. அதைக் கேரள அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டு அங்கே உற்பத்தியாகிற தேங்காய்க்கு அதிக விலை கிடைக்க வழிவகை செய்திருக்கிறது. * * *
இங்கே இருக்கிற தேங்காய் உற்பத்தியாளர்களும் நல்ல விலையைப் பெறுகிற வகையில்..... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வரி குற்றச்சாட்டான வரி. நேரடியாக வினாவுக்கு வரவும்.

திரு. கே. அர்ஜுனன்: தமிழகத் தேங்காய் உற்பத்தியாளர்களும் அதிக விலையைப் பெறுகிற வகையில் அதைப் பயன்படுத்திக் கொண்டு தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்கிற பஞ்சை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அதிக அளவில் அனுமதித்து இருக்கிறது என்று செய்தித்தாள்கள் மூலம் பார்க்கிறோம். எனவே வெளிநாடுகளில் உள்ள பஞ்சு மார்க்கெட்டில் நம்நாட்டு பஞ்சுக்கு அதிக விலை கிடைக்க மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ள காரணத்தால் விவசாயிகளுக்கு விலை இறக்கம் ஏற்படாமல் தடுக்கவும், பஞ்சுக்கு நல்ல விலை கிடைக்கவும் மத்திய அரசாங்கமே வெளிநாடுகளுக்குப் பஞ்சை ஏற்றுமதி செய்கிற பணியை மேற் கொள்ளுமா? அல்லது, மாநில அரசு முன்வந்து அதை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து, தனிக் கேள்வி -வி போடவும்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.